

சென்னை வடக்கு மாவட்டம், ராயபுரம் கிழக்கு பகுதி, 50 வது வட்டத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர் ஆர்.வி.கணேஷ் தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் என்.நவீன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தா.இளைய அருணா, பகுதி நிர்வாகிகள் த.ஜெயபாலன், ஆர்.டி.ஒ.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, எம்.மோகன், ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, ஆ.ஞான சேகரன், எஸ்.சீனிவாசன், டி.ஸ்டீபன், எம்.கிருஷ்ணவேணி, எம்.கலியமூர்த்தி, பி.சதீஷ்குமார், கு.ஜெயராஜ், ஆர்.வேழவேந்தன், ஆ.மனிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணிப்பூர் மாநில அமைச்சரின்

உதவியாளர் ஆயுதக் கும்பலால் கடத்தல்!

# மியான்மரில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் மணிப்பூரில் ஊடுருவல்!

## ஒன்றிய அரசின் உளவுப்பிரிவின் எச்சரிக்கையால் பரபரப்பு!

இம்பால், செப்.22-

மணிப்பூர் மாநில அமைச்சரின் உதவியாளர் ஆயுத கும்பலால் கடத்தப் பட்டதால் பரபரப்பு நிலவி யது. மியான்மரில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் மணிப்பூரில் ஊருடுவியதாக உளவுப்பிரிவு எச்சரிக்கை யால் அங்கு பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டுள்ளது.

மியான்மர் நாட்டில் பயிற்சி பெற்ற 900 குக்கி பிரிவினர் ஆயுதங்களுடன் மணிப்பூர் மாநிலத்திற்குள் ஊடுருவி உள்ளதாக உள வுப் பிரிவு எச்சரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து மணிப்பூர் மாநிலத்தில் பல மேத்தே கிராமங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

இதனை மாநில பாது காப்பு ஆலோசகர் குல்தீப் சிங் உறுதி செய்துள்ளார். இதனிடையே, மணிப்பூர் உணவுத் துறை அமைச்சரின் உதவியாளர் கடத்தப்பட் டுள்ளது அதிர்ச்சியை ஏற்ப டுத்தியுள்ளது.

ஆயுதங்களுடன் வந்த ஒரு கும்பல் நேற்று காலை 8 மணி அளவில் அமைச்ச ரின் உதவியாளரை கடத்தி சென்றுள்ளது. 24 மணி நேர மாகியும் இதுவரை தகவல் இல்லை என்று உறவினர் கள் தெரிவித்துள்ளனர். அமைச்சரின் உதவியாளரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ள தாக மணிப்பூர் போலீசார் கூறியுள்ளனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சென்னை மாநகராட்சி 159-வது வார்டு மீனம்பாக்கம் வ.உ.சி. தெரு திருவள்ளூர் தெருக்களில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 19.40 லட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் (R.O பிளான்ட்) அமைத்துத் தந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் ஆலந்தூர் பகுதி கழகச் செயலாளர் ப.குணாளன் வட்டக் கழகச் செயலாளர் மீனம் ப. கிருஷ்ணமூர்த்தி மாமன்ற உறுப்பினர் அமுதப்பிரியா மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில்,

# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் பணி நியமன ஆணைகளை வழங்கினார்!

காஞ்சிபுரம்,செப்.22

காஞ்சிபுரம் பச்சையப் பன் ஆடவர் கல்லூரியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, காஞ்சிபுரம் தமிழ்நாடு மாநில ஊரக மற் றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் காஞ்சிபு ரம் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகா மினை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவ னங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர் கள் துவக்கி வைத்து, வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்க ளுக்கு பணி நியமன ஆணை களை வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்ய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் களை நடத்திட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு மாத மும் ஒரு முகாம் வீதம் ஆண் டுக்கு 12 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் வேலைவாய்ப்பு அலுவல கத்தில் நடைபெறுகிறது. இதனைத் தவிர்த்து ஆண் டுக்கு இரண்டு மாபெரும் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம்கள் ஒவ் வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக இன்று காஞ்சிபுரம் மாவட் டத்தில் பச்சையப்பன் ஆட வர் கல்லூரியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, காஞ்சிபுரம் தமிழ் நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் காஞ்சிபு ரம் மாவட்ட நிர்வாகம் இணைந்து மாபெரும் தனி யார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் 150க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் ஏறக்குறைய 25,000 காலிப்பணியிடங்க ளுக்கான தகுதியான நபர் களை தேர்வு செய்ய முகாம் நடத்தியது. இம்முகாமில், சுமார் 3000 வேலை தேடும் இளைஞர்கள் கலந்து கொண்டனர், இதில் 500 நபர்கள் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழி லரசன்,

காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம்.மகாலட் சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், திட்ட இயக்குநர் (மகளிர் திட் டம்) மு.பிச்சாண்டி, மாவட்ட வேலைவாய்ப்பு துறை துணை இயக்குநர் ஆர்.அருணகிரி, அரசு அலு வலர்கள் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனம் அலுவ லர்கள், வேலை நாடுநர்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை ஏற்பாட்டில்

# நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை பெற்ற நிர்வாகிகளுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தங்க மோதிரம் அணிவித்தார்!

## பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பல்லாவரம், செப்.22-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாந கரம் பல்லாவரம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 19.9.2024 வியா ழக்கிழமை மாலை 5.00 மணி அளவில் பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் அமைந்துள்ள வெங்கடேஷ் மஹாலில் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பகுதி கழக அமைத்தலைவர் இரா. சேகர் வரவேற்புரை பகுதி கழக ச.சிக்குமார், வ.முத்து. பி.அம்பிகா. எஸ்.நெடுஞ் செயன், எம்.இளங்கோ, மீசை கே.ராதா, ஐ.கஜேந்தி ரன், சே.கன்னியப்பன் ஆகி யோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலா ளர் சிறு குறு மற்றும் நடுத் தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் எவ்வாறு கழக பணி ஆற்றுவது இல்லம் தோறும் இளைஞரணி சேர்த்தல் குறைந்தது ஒரு வார்டுக்கு ஆயிரம் இளை ஞர் அணி தம்பிமார்களை சேர்க்க வேண்டும் போன்ற கழக ஆக்க பணிகளை குறித்து சிறப்புரை ஆற்றி னார்.

அதை தொடர்ந்து நாடாளுமன்ற தொகுதியில் அதிக வாக்குகளை பெற்ற வட்டக் கழக செயலாளர் கள் மாமன்ற உறுப்பினர் கள் பாராட்டி பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செய லாளர் இ. எஸ்.பெர்னாட் அதைத்தொடர்ந்து வடக்கு பகுதி கழக வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் 9வது வார்டு தே.இளங்கோவன், ச.சிவக் குமார், லதா சிவக்குமார் 13 வது வார்டு பி.பரமசிவம், ரேணுகாதேவி பரமசிவம், 14வது பி.ராஜ்குமார், மங் கையர் திலகம் ராஜ்குமார், 15வது வார்டு டி.வி.ராஜா, 16வது வார்டு எம்.அந் தோணி, எஸ்.நெடுஞ்செழி யன், 17வது வார்டு பிரான் சிஸ் பால், மாவட்ட இளை ஞரணி துணை அமைப்பா ளர் கோ.ஜானகிராமன் 18 ஆவது வார்டு கோ. ரங்கநா தன்வி.பண்டரிநாதன், பிரேம லதா பண்டேரிநாதன்

மேலும் தெற்கு பகுதி சேர்ந்த வட்ட கழக செய லாளர் மாமன்ற உறுப்பினர் கள் 19வது வார்டு வி.என். சிலம்பரசன் விருந்தா தேவி சிலம்பரசன் 20வது வார்டு எம். முருகையன் 21வது வார்டு பி.வெங்கடேசன் கலைவாணி வெங்கடேசன் 24வது வார்டு ஆர். கே. நாக ராஜ் கீதா நாகராஜ 26 வது வார்டு எஸ். முஜிபுர் ரகு மான் 27 வது வார்டு டீ. கன் னியப்பன் கார்த்திகேயன் 28 வது வார்டு காமேஷ் ரங் கநாதன் ஆகியோர்களுக்கு அமைச்சர் அவர்கள் பொன் னாடை அணிவித்து மாலை அணிவித்து தங்க மோதிரம் அணிவித்தார்.

இந்நிகழ்ச்சியை பகுதி கழகச் செயலாளர் பல்லாவ ரம் மண்டலம் தலைவருமான இ. ஜோசப் அண்ணாதுரை ஏற்பாடு செய்திருந் தார்.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. ருணாநிதி எம்.எல்.ஏ. துணை மேயர் கோ.காமராஜ் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செய லாளர் இ.எஸ்.பெர்னாட் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எம். எஸ். கே. இப்ராஹிம் அ. தமிழ்மா றன் ந.நவீன் மு.ரஞ்சன் கோல்டு டி.பிரகாஷ் மு. நாகலிங்கம் க.ரமேஷ் த. ராஜாராமன் கே.தனசேக ரன், வே.தாமோதரன் மா. சந்திரகேசவன் எம்.ஐ.டி. எஸ். விஜய், பா.ராஜா, ஜெ.இன்சாமாம், என்.எஸ். மதனகோபால் வீடியோ ஹரி ஜூலியன் அதிசயராஜ் எஸ்.ஹரி ஜே.பிரசன்னா ஜி. நரேஷ்பாபு, எம்.பிரகாஷ் எல். டில்லிபாபு எம். இளவ ரசன் எம்.கமல்ராஜ், ஏ.அசோக்குமார்.

மேலும் இறுதியில் மாநக ரப் பிரதிநிதி ஜி. கருணா மூர்த்தி நன்றி உரை கூறி னார் கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள் வட்ட பிரிதிநிதிகள் இளைஞர் அணி மாணவர் அணி மக ளிர் அணி அனைத்து அணி களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கழக முன்னோ டிகள் சிறப்பு அழைப்பாளர் கள் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் பல்லாவரம் 200 அடி துரைப்பாக்கம் சாலை முழு வதும் கழக கொடி தோர ணம் கட்டப்பட்டு வழிநெ டுகளையும் நமது தளபதி அவர்களின் இலக்கான 200+ பிளஸ் வென்றிடு வோம் இரவு பகல் பாரா மல் உழைத்து விடுவோம் என்று பதாகைகள் வைத்து ஒரு மாநாடு போல் காட்சி அளித்தன.

எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் ஏற்பாடு! மாஸ் டி.வெங்கடேசன் தலைமை!

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! ஆர்.டி.சேகர் – கலாநிதி வீராசாமி – ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை, செப்.22

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட் டம் இன்று (22.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் நேதாஜி நகர் பகுதி நாடார்கள் உற வின்முறை சங்க திருமண மாளிகை, செ81ல் நடைபெ றுகிறது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் நிகழ்ச்சிகான ஏற்பாட் டினை செய்துள்ளார்.

பகுதி அவைத் தலைவர் மாஸ் டி.வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.பகுதி கழக நிர்வாகிகள் எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.ரீனிவாசன், ஆகி யோர் முன்னிலை வகிக்கின் றனர்.

நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கே. தேவன், ஆர்.எ.எம்.சசி குமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், ஏ.மணிமேகலை, ஆகியோர் வரவேற்கின் றனர்.

கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரையாற்று கிறார்.

மாவட்ட பொறுப்பா ளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப் பிக்கிறார்கள்.

இதில் நந்தனம் நம்பிரா ஜன், இரா.லட்சுமணன், ஆர்.வெற்றிவீரன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஏ.டி. மணி, டாகடர் கலைவா ணன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, இ.ரவிகுமார், எஸ்.சொக்கலிங்கம், பா. வேதாசலம், ஜி.ராஜா, மீஞ் சூர் ஜி.முகுந்தன், டி.சங்கர், கே.ஜானகிராமன், எஸ். ஜான்கென்னடி, எஸ்.எம். அப்துல்ஹமான், எஸ். பொன்ராஜ், எம்.சுசிலா, எஸ்.சரவணகுமார், எஸ். ராஜசேகர், ஏ.கே.பால்சாமி, எம்.ரசூல்மொய்தீன், டி. கே.ரத்தினகுமார், கே.யுவ ராஜ், ஏ.கோவிந்தராஜ், எம். ஆர்.பி.பழனி,

என்பீல்டுதுரைராஜ், எஸ்.சுப்பிரமணி, எஸ்.பாஸ் கர், பி.விஜியா, எஸ்.தமிழர சன், பி.முருகன், வி.மூர்த்தி, என்.பி.அஜித், என்.சுப்புரா யன், டி.தேவேந்திரன், வி.ராஜேஸ் வரி, எஸ்.சூரிய பிரபா, கே.அருண்குமார், எஸ்.கிருஷ்ணன், கே.பார்த் தசாரதி, வி. கார்த்திக், ஆர். சூர்யகாந்தா, ஆர்.நீலிமா, ஏ.எஸ்.சுலோச்சனா, எம். பாக்கியலட்சுமி, ஆ.ஜெபகு மாரி, எஸ்.நூரி, எஸ். சோபனா, எம்.பானு, கே.சுமதி, ஜி.சந்தியா, டி. நவீன்குமார், ஓம்சிவக்கு மார், பி.விக்னேஷ், கே. முரளி, கு.மோகன்ராஜ், எஸ்.தமிழரசன், டி.பிரபு, எம்.ரமேஷ், வி.கார்த்திக், கே.காளிதாஸ், டி.திலகர், எம்.உமாமகேஷ்வரி, எம். பி.கிளைமன்ட்ராஜ், எஸ். ஜெகன், ஆர்.ராதிகா, வி. விஜயகுமார், சி.சென்சம் மாள், மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக முன்னாள் நிர்வாகி கள், சார்புமன்றம், இளை ஞர்மன்றம், மகளிர் மன்ற நிர்வாகிகள், கழக முன் னோடிகள், கழக உடன்பி றப்புகள், அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்படுகிறது.

மு.கோவிந்தராஜ், நன்றி கூறுகிறார்.

45 வது வட்டச் செயலாளர் ஜி. மாரிமுத்து சகோதரர்

# ஜி.மணிகண்டன் (எ) மணியா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி !

சென்னை, செப்.22



45வது வட்டக் கழக செயலாளர் ஜி. மாரிமுத்து அவர்களின் சகோதரர் ஜி. மணிகண்டன் என்கிற மணியா அவர்கள் நேற்று 21.9.2024 சனிக்கிழமை அதி காலை 3:30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று 22.9.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் பி.பி.ரோடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



வேளச்சேரி 177 வது வார்டில் கிராமசபை கூட்டம் காந்தி சாலை டி.யூ.சி.எஸ் திடலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிராமசபை தலைவர்கள்,உறுப்பினர்கள், மாநகராட்சி உதவி பொறியாளர் உசேன், குடிநீர் வடிகால் வாரிய உதவி பொறியாளர் திருமதி. நித்யா, வருவாய் மற்றும் பொதுசுகாதார அலுவலர்கள் கலந்து கொண்டு மக்கள் அடிப்படை தேவைகள் குறித்து பேசினர். .இறுதியாக கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளரும் 177 வது மாமன்ற உறுப்பினருமான பெ.மணிமாறன் உரையாற்றினார்.

# பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள காவல் நிலையங்களிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பில்லை!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 22 -

பா.ஜ.க. ஆளும் மாநிலங் களில் உள்ள காவல்நிலை யங்களிலேயே பெண்க ளுக்கு பாதுகாப்பு இல்லை என காங்கிரஸ் குற்றம்சாட்டி யுள்ளது.

இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தி தொடர்பா ளர் சுப்ரியா ஸ்ரீனாடே, ஒடிசா மாநிலத்தில் உள்ள காவல்நி லையத்தில் பெண் ஒருவர் உதவி கேட்டு சென்ற நிலை யில் ராணுவ உயரதிகாரி பாலியல் வன்கொடுமை செய்ததை சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஒடிசாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரத மர் மோடி, பெண்களின் முன் னேற்றம் குறித்து பேசிய 72 மணி நேரத்தில், காவல்நி லையத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும், இது குறித்து பா.ஜ.க. தலைவர் கள் ஒருவர் கூட கண்டனம் தெரிவிக்கவில்லை என புகார் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், ஒரு வழக்கறிஞர் என்றும், ராணுவ அதிகாரி ஒருவரு டன் திருமணம் நிச்சயிக்கப் பட்டுள்ளதாகவும், உதவி கேட்டு வந்த பெண்ணுக்கு இந்த நிலைமை என்றால் மற்ற பெண்களின் நிலை என்னவாக இருக்கும் என் றும் காங்கிரஸ் செய்தி தொடர் பாளர் சுப்ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார். பிர தமர் நரேந்திர மோடி ஒடிசா சம்பவத்தில் மவுனம் காப்பது ஏன் என்றும் சுப்ரியா வினவி யுள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடு மைக்கு எதிராக போராட்டம் நடத்திய பா.ஜ.க.வினர், ஒடிசா சம்பவத்தை புறக்க ணிப்பது ஏன் என்றும் காங்கி ரஸ் செய்தி தொடர்பாளர் சுப் ரியா ஸ்ரீனாடே கேள்வி எழுப்பியுள்ளார்.



சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், சி.எம்.எஸ்.கங்காபுரம் பள்ளியின் தலைமை ஆசிரியர் எஸ். நீலாவிற்கு ஆசிரியர் தினத்தன்று தமிழ்நாடு அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதினை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். ஆயிரம்விளக்கு தொகுதி 113வது வார்டுக்குட்பட்ட தருமாபுரம் பள்ளியின் தலைமை ஆசிரியரை 113 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரேமா சுரேஷ் பாராட்டி சிறப்பு செய்தார். உடன் ஆசிரியை எஸ்.சகாயசெலினா, நுங்கை எஸ்.சுரேஸ், மு.வெங்கடேசன், ஆர்.சுந்தரமூர்த்தி, பி.கமலகண்ணன் ஆகியோர் உள்ளனர்.